இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 359 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 23 – செவ்வாய்க்கிழமை 08 ஆகஸ்ட் 2023 – வேலூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 359: Thiruvalluvar Year - 2054 - Aadi 23 - Tuesday 08 August 2023 - Vellore 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (7.8.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அமைந்துள்ள பகுதியிலிருந்து காமராஜர் சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது. இந்த நிகழ்வில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் 5-ஆம் ஆண்டு நினைவு நாள்! சென்னையில் முதல்வர் -

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பெருந்திரள் அமைதிப் பேரணி!

## தமிழகமெங்கும் நினைவஞ்சலி; நாடாளுமன்ற வளாகத்தில் கலைஞரின் நினைவைப் போற்றும் நிகழ்வு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) சென்னை, முரசொலி அலுவலகத்தில், புதுப்பொலிவுடன் ‘முரசொலி’ நாளிதழின் அனைத்துப் பதிப்புகளை படிப்பதற்கான இணையதளம் மற்றும் செயலியை தொடங்கி வைத்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மு.க.தமிழரசு, முரசொலி நாளிதழின் பொது மேலாளர் எஸ்.ராஜசேகர், The Rising Sun இதழின் ஆசிரியர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், தொழில்நுட்ப வல்லுநர் பி.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.

**சென்னை, ஆக.8-**

**முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்று (ஆக. 7) கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது. இதில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு உள்ளிட்ட கழக முன்னணியினர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.**

ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம் மதச்சார் பின்மை உள்ளிட்ட அனைத்து முற்போக்கு இலட்சியங்களுக்காகவும் வாழ்நாள் முழுவதும் வாதாடி போராடி ஆட்சியில் இருந்த நேரங்களில் உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய நமது அருமைத் தலைவர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நேற்று (07.08.2023) 5ம் ஆண்டு நினைவு நாள்.

தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு பிரிந்தாலும் அவர் கொண்ட கொள்கையாலும் சரித்திர சாதனைகளாலும் கலாச்சார நினைவுகளோடும் நம்மோடு வாழ்பவர் கலைஞர் அவர்கள்.

மனித நேயத்தோடு பழகிய பண்பாளர், எழுத்தால் ஈர்த்த தலைவர் பேச்சால் பரவசப்படுத்திய தலைவர். தமிழன் என்ற உணர்வை தழைக்கச் செய்தவர், அரசியல் பண்பாளர்.

“ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்” என ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்த பன்முகம் கொண்ட தலைவரின் நினைவு நாள்.

சமூக நீதி கண்ட சமத்துவ தலைவர், சமதர்மக் கொள்கையை நிலை நாட்டியவர். மனிதநேயம் மிக்க தலைவரின் திருவுருவப் படத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப் பேரவையில் குடியரசுத் தலைவர் திருக்கரங்களால் திறக்கச் செய்து புகழ் சேர்த்து உள்ளார்கள்.

வாழ்நாள் முழுவதும் தமிழ் வாழ, தமிழர் வாழ, தமிழ்நாடு வாழ, தமிழ் கலாச்சாரம் வாழ வாழ்ந்த தலைவரின் நினைவைப் போற்றி புகழ்பாடுவோம்.

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக் கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்தகாவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# புதுப்பொலிவுடன் ‘முரசொலி’ இணையதளம் - செயலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 8-**

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று. இந்நாளில் கலைஞரின் மூத்த பிள்ளையாம் ‘முரசொலி’ அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில், புதுப்பொலிவுடன் முரசொலி நாளிதழின் அனைத்துப் பதிப்புகளின் இணையதளம் மற்றும் செயலியை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.**

ஜனநாயகம், சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார் பின்மை உள்ளிட்ட அனைத்து முற்போக்கு இலட்சியங்களுக்காகவும் வாழ்நாள் முழுவதும் வாதாடி, போராடி உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய அருமை தலைவர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்தப் பிள்ளையாம் முரசொலியின் அனைத்துப் பதிப்புகளின் இணைய தளம் - செயலி துவக்க விழா நேற்று (7.8.2023) காலை 9.00 மணியளவில் முரசொலி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

புதுப்பொலிவுடன் முரசொலி இணையதளம் - செயலியை கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரை முருகன், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மு.க. தமிழரசு, ‘முரசொலி’ நாளிதழின் பொது மேலாளர் எஸ்.ராஜசேகர், ‘தி ரைசிங் சன்’ ஆசிரியர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், தொழில் நுட்ப வல்லுநர் பி.பார்த்திபன் உள்ளிட்ட முரசொலி ஆசிரியர் குழுவினர் மற்றும் அலுவலக பணியாளர்கள், கழகத்தினர் திரளாகப் பங்கேற்றனர்.



புதுடெல்லி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில், வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்திற்கு, அவரது நினைவு தினத்தை முன்னிட்டு, காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதில் தி.மு.க. மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் டி.எம்.கதிர் ஆனந்த், தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கனிமொழி என்.வி.என்.சோமு, பொன். கௌதம சிகாமணி, எம்.எம்.அப்துல்லா, மருத்துவர் கலாநிதி வீராசாமி உள்ளிட்ட தி.மு.க. எம்.பி.க்கள் மற்றும் காங். எம்.பி. ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.